

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.9.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 32 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுப் பொருட்கள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்த திருமண விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் சி.ஹரிப்ரியா, மா.கவிதா, பொ.ஜெயராமன், கோ.செ.மங்கையர்க்கரசி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மணமக்களின் உறவினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒரே ஆண்டில் இந்து அறநிலையத் துறையின் சார்பாக,

# ஆயிரம் இணையர்களுக்கு திருமணம் நடத்தப்பட்டுள்ளது!

## சென்னையில் 32 இணையர் திருமண விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை, செப். 16 –**

**சென்னை கபாலீஸ்வரர் – கற்பகாம்பாள் மண்டபத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 32 இணையர்களுக்கு திருமணத்தை, நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்.**

**திருமணங்களை நடத்திவைத்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார். அப்போது அவர், "உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை ஆணாக இருந்தாலும் சரி அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி ஒரு அழகான தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, அறநிலையத் துறையின் சார்பாக, 32 இணையருக்கு தலா நான்கு கிராம் தங்கம், சீர்வரிசையுடன் இந்தத் திருமணத்தை, உங்களின் முன்னிலையில் நடத்தி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அத்தனைபேரின் சார்பாக, மணமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இணைய இருக்கின்ற 193 இணையருக்கு திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது. இந்தத்திருமணத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 1,000 திருமணங்கள்

சில மாதங்களுக்கு முன்பு இதே திருமண அரங்கத்தில், இதே அறநிலையத் துறையின் சார்பாக 40 இணையருக்கு திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பைக் கொடுத்தார். இப்போது, மீண்டும் அந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். கடந்த மே மாதம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில், மிகமிக முக்கியமான அறிவிப்பை வெளியிட்டார். இந்த ஓர் ஆண்டில் மட்டும் அறநிலையத்துறையின் சார்பாக, ஆயிரம் இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்பதுதான் அந்த இலக்கு. அதன்படி நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஜூலை மாதம் 775 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நடத்தி வைக்கின்ற திருமணங்கள் மூலமாக, அந்த இலக்கை அவர் அடைந்துவிட்டார். 1,000 திருமணங்களை அறநிலையத்துறையின் சார்பாக நடத்தி முடித்துவிட்டார்.

எனக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த இணையர்களிடம் பேசிக்கொண்டு இருந்தேன். மணமகனின் பெயர் சந்தோஷ், மணமகளின் பெயர் லட்சுமி. சந்தோஷிடம், `லட்சுமியை எப்படிப்பா தெரியும் என்று கேட்டேன். காதல் திருமணம் என்று நினைத்தேன். அவரும் காதல் திருமணம்தான் என்றுச் சொன்னார். எப்படி பழக்கம் என்று கேட்டேன். ஒரு வருடமாக ஒரே இடத்தில் வேலை செய்கிறோம் என்றுச் சொன்னார். காதல் திருமணத்தில் இருக்கின்ற பிரச்சினை எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், எனக்கும் காதல் திருமணம்தான். முதலில் பெண் ஒப்புகொள்ள வேண்டும். அதற்கு நிறைய சிரமப்பட வேண்டும். பெண்ணின் அப்பா, அம்மா ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களை சமாதானபடுத்த வேண்டும். பெண்ணும், மாமனார், மாமியாரும் ஒப்புகொண்டபின், பெண்ணின் மாமா, சித்தப்பா என்று உறவினர்கள் புதிதாக கிளம்பி வருவார்கள். ஏதாவது ஒரு பிரச்சினையை இழுத்து விடுவார்கள். அவர்களின் சம்மதத்தை வாங்கிய பிறகு கடைசியாக பெண், `முடியாது' என்றுச் சொல்லும். இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த பிரச்சினைகளை எல்லாம் சமாளித்து, இன்றைக்கு சந்தோஷ் – லட்சுமி போன்று வந்துள்ள பல தம்பதிகள் காதல் திருமணம் என்று நினைக்கிறேன்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 32 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுப் பொருட்கள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

### அன்பு நிலையத்துறை

இது அறநிலையத்துறையா, இல்லை அன்பு நிலையத்துறையா என்று தெரியவில்லை. அவ்வளவு காதல் திருமணங்களை, அண்ணன் சேகர்பாபு அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இணையர்களை பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சி. அனைவரும் நன்றாக படித்திருக்கிறார்கள். அதில் கூடுதல் மகிழ்ச்சி. ஒரு 50, 60 வருடங்களுக்கு முன்பு இதுவெல்லாம் சாத்தியம் இல்லை. மணமக்கள் உங்களின் அப்பா – அம்மா, தாத்தா – பாட்டி அவர்களின் திருமண பத்திரிகைகளை எல்லாம் எடுத்து பார்த்தீர்கள் என்றால், அவர்களின் பெயருக்குப் பின் அவர்கள் படித்து வாங்கிய பட்டத்தின் பெயர் இருக்காது. அவர்களின் ஜாதி பெயர்தான் இருக்கும்.

இப்போது தமிழ்நாட்டில் நடக்கின்ற திருமண பத்திரிக்கையில் அந்த ஜாதிப்பெயர் இருப்பதில்லை. அந்த மணமகனும், மணமகளும் படித்து வாங்கிய பட்டத்தின் பெயரைப் போட்டுக் கொள்கிறார்கள். இந்தப் பெருமை இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு மட்டும்தான் இருக்கிறது. இதற்கு காரணம், நம் திராவிட இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள்தான். அவர்கள் நடத்திய பல்வேறு போராட்டங்களின் காரணமாகத் தான், இத்தனை சீர்த்திருத்தங்களும் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கின்றன.

குறிப்பாக, நிறைய மகளிர் வந்திருக்கிறீர்கள். மகளிருக்காக ஒவ்வொரு நாளும் நம் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலமாக இந்த நான்கரை வருடத்தில் 780 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதை நகைச்சுவைக்காக சொல்லவில்லை. ஒரு திட்டத்தை எப்படி அழகாக பயன்படுத்த வேண்டும் என்று மகளிரிடம்தான் கேட்டு கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றி. ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

### காலை உணவுத் திட்டம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். சமீபத்தில், இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும்போது, சிறப்பு விருந்தினராக பஞ்சாப் முதலமைச்சர் இங்கு வந்திருந்தார். பஞ்சாப் முதலமைச்சர் பேசும்போது, குறிப்பிட்டுச் சொன்னார். ``தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு எனது வாழ்த்துகள். இது ஒரு சிறப்பான திட்டம். விரைவில் இந்தத் திட்டத்தை, என் மாநிலம் பஞ்சாப்பில் இதை அறிமுகப் படுத்துகிறேன்" என்று சொன்னார். நம் முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்கக்கூடியவர்.

மாணவர்கள் பள்ளிப்படிப்பு படித்தால் மட்டும்பத்தாது. பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு, கல்லூரிக்கு சென்று உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையை, அந்த மாணவர்களின் வங்கிக் கணக்கில் நம் முதலமைச்சர் கொடுக்கிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இதன் மூலம் கடந்த இரண்டு வருடங்களாக 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, செப்டம்பர் 15–ஆம் தேதியுடன் இரண்டு வருடம் நிறைவடைந்து, மூன்றாவது வருடத்தில் நம் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கிறார்.

### உங்களுடன் முதலமைச்சர்

உங்களுடன் முதலமைச்சர் முகாமை தமிழ்நாடு முழுவதும் நடத்தியுள்ளோம். அதில் 40 சதவிகித விண்ணப்பங்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்குதான் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தில் ஒரு சில விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளார். இன்னும் ஓரிரு மாதங்களில் விடுபட்டுப்போன அனைத்து மகளிருக்கும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நிச்சயமாக கிடைக்கும்.

இதுமாதிரியான பல திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே தலைசிறந்த, முன்னேற்றமடைந்த மாநிலமாக 11.19 சதவிகித வளர்ச்சியுடன் தமிழ்நாடு விளங்குகிறது.

அண்ணன் சேகர்பாபு அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற இந்து சமய அறநிலையத்துறை இன்னும் சிறப்பாக, அனைத்து துறைகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. இந்த நான்கரை வருடத்தில் மட்டும் கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 700 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

### கலை – அறிவியல் கல்லூரிகள்

ஆயிரத்துக்கும் அதிகமான திருக்கோயில்களுக்கு சொந்தமான 8 ஆயிரம் கோடி மதிப்பிலான கோயில் நிலங்களை அறநிலையத்துறைக்கு மீட்டுக் கொடுத்துள்ளார். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் மூலம் 29 அர்ச்சகர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. நம் அரசு அமைந்த பிறகு, சென்னை கொளத்தூர், திருச்செங்கோடு, ஒட்டன்சத்திரம், விளாத்திகுளம் ஆகிய இடங்களில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை, நம் அறநிலையத்துறையின் மூலமாக திறந்திருக்கிறார்.

ஏழை, எளிய பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று நாம் கல்லூரிகளைத் திறந்தால், கோயில் நிதியில் எதற்கு கல்லூரி திறக்கிறீர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறார். இதை எதிர்த்து, அவர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். ஆனால், நீதிமன்றம் அறநிலையத்துறையின் பணம் மக்களுக்குத் தான் சொந்தம், அதை கல்விக்கு உபயோகப் படுத்தலாம் என்று சொல்லி அனுமதி வழங்கி விட்டார்கள்.

எனக்கு இப்போது என்ன சந்தேகம் என்றால், அறநிலையத்துறையில் இவ்வளவு திருமணங்கள் நடக்கின்றன. இதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் கோபித்துக்கொண்டாலும் கோபித்துக் கொள்வார். எப்படி அறநிலையத்துறையின் பணத்தை எடுத்து திருமணம் நடத்துவீர்கள் என்று கோபித்துக்கொண்டாலும், கொள்வார். அப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைய எதிர்க்கட்சி செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

அந்த அளவுக்கு திராவிட மாடல் அரசின் சாதனைகள், அவர்களின் கண்களை உறுத்திக்கொண்டு இருக்கின்றன. திராவிட மாடல் அரசு என்றைக்கும் உங்களுக்கு பக்கபலமாக இருக்கும். நீங்களும் திராவிட மாடல் அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் பக்கபலமாக என்றும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### திருமண வாழ்க்கை

மணமக்கள் அனைவரும் நன்கு படித்தவர்கள். அவர்களுக்கு அறிவுரை வழங்கினால், அவர்களுக்குப் பிடிக்காது. இருந்தாலும், உங்கள் கூட பிறக்காத ஒரு அண்ணனாக இந்த அறிவுரையைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, நடக்க வேண்டும். ஒருவரையொருவர் சுயமரியாதையோடு நடத்த வேண்டும். எதற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ, அதற்கு விட்டுக்கொடுத்து, எதற்கு விட்டுக் கொடுக்க கூடாதோ, அதில் உறுதியாக நின்று, உங்கள் திருமண வாழ்க்கையை வாழுங்கள். உரிமைகளைக் கேட்டுப் பெறுங்கள்.

முக்கியமாக நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வைக்கின்ற கோரிக்கை. உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை ஆணாக இருந்தாலும் சரி அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி ஒரு அழகான தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, நம் திராவிட மாடல் அரசும், முதலமைச்சரும் போல நீங்கள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி, இந்த வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, கருணாநிதி, துணை மேயர் மகேஷ்குமார், துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் மணிவாசகம் ஐ.ஏ.எஸ்., இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர் ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்., மண்டல குழு தலைவர் மதன் மோகன், கூடுதல் ஆணையர்கள் அனுப்பிரியா, கவிதா, ஜெயராமன், மங்கையர்க்கரசி, ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, ஏழுமலை, நந்தனம் மதி, முரளி, மகேஷ்குமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.